## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXIII Code of Criminal Procedure)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi*
## *CC.No.394/2020 – P.W.1 (LW2)*

| | |
|---|---|
| *Name* | சித்ரா |
| *Father/Husband's Name* | சேட்டு |
| *Village* | பூஞ்சையூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 62 |

**எதிரிகள் 1, 2 ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 28.05.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் அமரேசன் என்பவர் எனது மகன் ஆவார். தற்போது சிங்கப்பூரில் வேலை செய்கிறார்.

2. கடந்த 22.09.2017ம் தேதியன்று மாலை 03.00 மணியளவில் நானும் எனது மகனும் அவரது இருச்சக்கர வாகனத்தில் மன்னார்குடியில் உள்ள எனது மகள் வீட்டிற்கு செல்வதற்காக பூஞசையூரிலிருந்து மன்னார்குடி வந்தபோது, தட்டாங்கோவில் அருகில் உள்ள ரெட்டைபுலி என்ற இடத்தில் எங்களுக்கு பின்னால் இருச்சக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் எனது செயினை அறுத்துவிட்டு என்னை வண்டியிலிருந்து கீழே தள்ளிவிட்டுவிட்டனர். யார் எனது செயினை அறுத்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. சம்பவம் நடந்த அடுத்த மாதம் நான் எனது செயினை காவலர்களிடமிருந்து பெற்றுக்கொண்டேன். இந்த சம்பவம் தொடர்பாக எனது மகன் புகார் கொடுத்தார்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு என் மகன் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என் மகனுடையதுதான்.

3. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அறுந்த நிலையில் உள்ள தங்க செயின் என்னுடையதுதான். நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக்கொண்டேன். (**புகைப்படம் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில்</u> <u>குறுக்கு விசாரணை</u>**

1. நீதிமன்றத்தில் என் மகன் தான் செயின் வாங்குவதற்காக மனு தாக்கல் செய்தார் என்றால் - சரிதான். ஆனால் செயினை நான் தான் வாங்கினேன்.

2. புகார் கொடுக்கும்போது என் மகன் எனது செயின் 4 பவுன் என குறிப்பிட்டுள்ளார் என்றால் - சரிதான். 4 பவுன் என்றால் மொத்தமானது என்றும் புகைப்படத்தில் காண்பித்தது மெல்லிய செயின் என்றால் - சரிதான்.

3. போலிசார் என்றைக்கு எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் - சம்பவத்திற்கு மறுநாள் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். எனக்கு காயம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தப்பட்ட மருத்துவ குறிப்புகளை போலிசார் வாங்கிக்கொண்டார்களா என்றால் -இல்லை.

4. இந்த சம்பவம் தொடர்பாக என் மகன் எப்போது புகார் கொடுத்தார் என்றால் - சம்பவத்திற்கு மறுநாள். புகார் கொடுக்கும்போது யார் யார் சென்றீர்கள என்றால் - நான் , எனது அக்கா மகன், எனது மகன்.

5. போலிசார் என்னை சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தபோது குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் எதிரிகளை குறித்து அங்க அடையாளம், வாகனத்தின் நிறம் வகைப்பாடு குறித்து ஏதேனும் கேள்விகளை முன்வைத்து விசாரித்தார்களா என்றால் - இல்லை.

6. சம்பவத்திற்கு மறுநாள் காவல்நிலையம் செல்லவில்லை என்றும் என் மகளின் வீட்டில் ஓய்வு எடுத்தேன் என்றால் - இல்லை. நான் காவல்நிலையம் சென்றிருந்தால் என்னிடம் போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றிருப்பார்கள் என்றால் - சரியல்ல.

7. சம்பவம் நடந்த மறுதினத்திலிருந்து இன்றைய தினம் வரை போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் - சரிதான்.

8. நீதிமன்றத்திலிருந்து நான் பெற்றுக்கொண்டதாக புகைப்படத்தில் காட்டப்படும் செயின் என்னுடையது அல்ல என்றால் - சரியல்ல. வழக்கு விசாரணை அதிகாரி வழக்கினை முடித்து வைக்க வேண்டி வேறொரு செயினை இந்த வழக்கில் எனக்கு கொடுத்துள்ளார் என்றால் - சரியல்ல.

9. நான் நீதிமன்றத்திலிருந்து பெற்றுச் சென்ற செயின் என்ன அளவீடு என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது.

10. எனது அக்கா வீட்டுக்காரரை போலிசார் விசாரித்தார்களா என்றால் - அன்றைய தினம் விசாரித்தார்கள்.